"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.198,94,80,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.2,000/— ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை 23—9—2015 (புதன்கிழமை) காலை 10—00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1—47 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

— ஏதுமில்லை —

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

361. மானியக் கோரிக்கை எண் 22—காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2015—2016. (தமிழ், ஆங்கிலம்)

2015 செப்டம்பர் 22]

362. மானியக் கோரிக்கை எண் 23—தியணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2015–2016. (தமிழ், ஆங்கிலம்)

363. "விளையாட்டுத் துறையின் நான்காண்டு சாதனை" என்கிற சிறுநூல். (தமிழ்)

364. வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) மற்றும் முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2015–2016. (தமிழ்)

365. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு, 2015–2016. (தமிழ்)

****

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS